RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijmrd2531

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

# The Tamil Perspective on Family Structure

**H. Geetha** [a,*]

[a] Department of Tamil, Subbalakshmi Lakshmipathy College of Science, Madurai-625022, Tamil Nadu, India.

*Corresponding author Email: kvkani2016@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd2531

Received: 28-04-2025; Revised: 17-08-2024; Accepted: 25-08-2025; Published: 05-09-2025

**Abstract:** The ancient Tamils held very high ideals regarding family life. For them, virtue was not just a part of life; they considered the practice of virtue throughout life as their guiding principle. That is why they called family life 'Illaram' (the virtuous life of a householder). Although they respected asceticism, they considered family life to be superior. They believed that family life itself was virtuous. They conducted this virtuous life through the institution of the family, because the family unit serves as a great force that drives society. The family structure distinguishes humans from animals. It is considered the foundation of human civilization and the bedrock of culture. It is within the family structure that a person experiences the creation of relationships and the love that arises from them. The fact that Thiruvalluvar dedicated a separate chapter to family life in his work on domestic virtue reveals the principles of the Tamils regarding the family, which is the institution established by humans to attain contentment. The purpose of the family is for the individual to transcend the boundaries of their wife, children, and relatives, and attain a state of mind that shows compassion to all living beings. That is why the poets of Sangam literature, when expressing inner emotions, have done so in connection with nature. The objective of this research paper is to present the thoughts of the Tamils regarding such a family life.

**Keywords:** Family Structure, Sangam Literature, Illaram, Civilization, Thiruvalluvar

**Language:** Tamil

---

# குடும்ப அமைப்பு பற்றிய தமிழர் கொள்கை

**ஹ.கீதா** [அ, *],

[அ] தமிழ்த்துறை, சுப்பலக்ஷ்மி லட்சுமிபதி காலேஜ் ஆப் சயின்ஸ், எலியார்பத்தி, மதுரை-625022, தமிழ்நாடு, இந்தியா

## முன்னுரை

தமிழ் சங்க இலக்கியங்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான தொன்மை வாய்ந்தவையாகும். இலக்கியங்களை காலத்தை காட்டும் கண்ணாடி என அழைப்பர். சமூகத்தில் நிலவிய கருத்துகள், நிகழ்வுகள் ஆகியவை இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும். அவற்றின் வழியாக கடந்த காலத்தில் நிகழ்ந்தவை குறித்து அறிந்து கொள்ளலாம். தமிழ்ச் சமூகம் எதிர்கொண்ட பல்வேறு சிக்கல்களை தமிழ் இலக்கியங்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம். இன்றைக்கு பஞ்சம் என்பது உலகிற்கு மாபெரும் அச்சுறுத்தலாக அமைகின்றது. பஞ்சம் ஒரு உலகளாவிய சிக்கலாக உருவெடுத்துள்ள இன்றைய சூழலில் தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட்ட பஞ்சங்கள் குறித்தும் மக்கள் அவற்றை எதிர்கொண்ட விதம் குறித்தும் பஞ்சகாலத்தில் இயற்றப்பட்ட நூல்கள் குறித்தும் இக்கட்டுரையில் விவாதிக்கப்படுகின்றது.

## குடும்பம் என்னும் அமைப்பு

ஆதி மனிதன் நாகரீகம் இல்லாமல் வாழ்ந்த அக்காலத்தில் ஓரிடத்தில் நிலைத்து வாழ்ந்தது இல்லை. தங்குவதற்கு மர நிழலும், மழைக்கு குகையும் எங்கு கிடைக்கிறதோ அங்கெல்லாம் ஓடி ஆடி திரிந்தான். அதனால் ஏற்பட்ட களைப்பு தீர அமைதியோடு அமர அவனுக்கு ஓர் இடம் தேவைப்பட்டது. அந்த இடத்தில் பொதுஉடைமைச் சமூகம் அதாவது, தாய்வழிச் சமூகமாக வாழ்ந்த மனிதன் தனக்கென மனைவி, குழந்தை, சொத்து என வாழ முற்பட்ட போது தோன்றிய, சொத்துடமைச் சமூகம் ஏற்பட்ட போதே குடும்பம் என்ற அமைப்பை ஏற்படுத்திக் கொண்டான் எனலாம். இதனையே நம் முன்னோர்களின் வாழ்க்கைப் பறைசாற்றுகின்றன. பண்டைய இலக்கியங்களில் குடும்பம் என்னும் சொல்லாட்சி இல்லை. ஆனால் அவற்றிற்கு இணையான இல், மனை, குடி ஆகிய சொற்கள் இடம் பெற்றுள்ளன.

ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்க்கை நடத்தும் குடும்ப அமைப்பைத் தமிழ்ச் சான்றோர்கள் இல்லறம் என்றனர். கணவன், மனைவி, பெற்றோர், குழந்தைகள், உற்றார், உறவினர் என்ற தொடரில் அமைவது குடும்பம். இத்தகைய குடும்ப அமைப்பிற்கு அன்பு ஒன்றே அடிப்படை. மனித நாகரிகத்தின் அடிப்படையாகவும் பண்பாட்டின் நிலைக்களனாகவும் கருதப்படுவது. நல்லனவற்றை நினைக்கவும் தீய எண்ணங்கள் படியாமல் இருக்கவும் தன் வீடு தன் குழந்தை என்ற அக்கறையில் தன் செயலை மாசுபடாமல் செய்ய உதவும் அமைப்பாக குடும்பம் இருந்தது. குடும்பம் என்னும் சமூக அமைப்பால் வளமான ஒரு சமூகத்தை உருவாக்க முடியும் என்று நம்பிக்கைக் கொண்டனர். ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல கணவனும் மனைவியும் குடும்பம் என்னும் அமைப்பை பாதுகாக்க கூடியவர்கள் என்பதை வள்ளுவர் இல்லறவியலில் கூறியுள்ளார். இவை தமிழர்களின் உள்ளத்தை நன்கு அறிந்துகொண்டு கூறியது போல் இருக்கின்றது.

இல்வாழ்வான் என்பவன் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் என்னும் அனைத்தையும் போற்றும் கடமை உடையவன் “வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன், தெய்வத்துள் வைக்கப் படும், துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் அவன் துணையாவான், அறநெறியில் வாழ்வை நடத்தினால் துறவறமே தேவையில்லை, தன்னையும் அறவழியில் நடத்திக்கொண்டு பிறரையும் அறநெறியில் செலுத்துகின்ற துறவியை விட வல்லமை உடையவன், வீடுபேறு அடைய முயல்வாருள் தலையாயவன், வாழ்வாரே அவன் முயற்சியால், தேடும் பொருள் எல்லாம் தகுதி அவருக்கு உதவுவதற்கு, என்று இல்வாழ்க்கையின் மேன்மையை, குடும்பத் தலைவனுக்கு வேண்டிய பொறுப்புகளை எடுத்துரைக்கின்றார் வள்ளுவர். அதற்குச் சான்றாக

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது” (குறள் 45)

என்று வள்ளுவர் வாய் மொழியை முன்னோர் மொழியை பொன்போல் போற்றுவதே அறியலாம் (Parimelazhagar, 1974).

## சங்க இலக்கியத்தில் இல்லறத்தின் மேன்மை

இல்வாழ்க்கையின் மேன்மையை வள்ளுவம் மட்டும் கூறவில்லை.சங்க இலக்கியத்தின் அத்தனை பாடல்களிலும் தமிழர்களின் வாழ்வியல் விழுமியங்கள் பரவிக்கிடக்கின்றன. வள்ளுவர் கூறக்கூடிய இல்லற நெறி பற்றிய கருத்துக்கள் அத்தனையும் சங்க இலக்கியங்களில் பரந்துபட்டு கிடைக்கின்றன. அன்பும் அறமும் உடையவர்களாக கணவன்-மனைவி வாழ்வு அமைய வேண்டும் என்று கருதினார் வள்ளுவர். சங்க இலக்கியங்கள் கணவனும் மனைவியும் மனமொத்து, தன்னலமின்றி, ஒருவர் நலனில் ஒருவர் மனமொன்றி, இருவர் என்னும் கிழமை பூண்டு வாழ வேண்டும் என்பதனை பல பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன, குறுந்தொகை பாடல் ஒன்று மனைவி தன் கணவன் மீது கொண்டுள்ள அன்பை விளக்குகின்ற வகையில் அமைகின்றது.

“இம்மை மாறி மறுமை யாயினும்

நீயாகியர்ரென் கணவனை

யானாகியர்நெஞ்சுநேர்பவளே" (குறுந் 49)

என்று கூறுவதாக அமைந்துள்ளது. இந்த பாடலில் சொல்லொணாக் கருத்துக்கள் புதைந்து கிடக்கின்றன.ஒரு மனைவி தன் கணவன் மீது கொண்டுள்ள ஆழ்ந்த அன்பினை எடுத்துக் காட்டுவதாக அமைந்தள்ளது. பூ இடைப்படினும் யாண்டு கழிந்தன்ன என்று வருந்தும் அன்றில் பறவை போல் வாழ்ந்த கணவன் மனைவியால் மட்டுமே இதனைச் சொல்ல முடியும். ஏனெனில் கணவன் மனைவி என்னும் உறவு திடீரென்று ஒருநாளில் ஏற்படுவது இல்லை என்று நம் இலக்கியங்கள் கூறுகின்றன. பல பிறவிகளில் தொடர்ந்து வருவது என்று கருதினர்.

முன்னைப் பிறவிகளில் கணவன்-மனைவியாக வாழ்ந்தவர்கள் ஊழின் வலிமையால் மீண்டும் கூடுகின்றனர் என்று நம்பினர். தலைவன் தன் மீது கொண்ட காதல் நிலத்தினும் பெரிது வானத்தை விட உயர்ந்தது நீரின் அளவைக் காட்டிலும் மிகுந்தது என்று தலைவி தன் தோழியிடம் கூறுகின்றாள். காதல் என்பது வெறும் உடற் காமம் அன்று அது எல்லாவற்றையும் கடந்து நிற்பது. அதாவது அன்பால் மனதால் உயர்ந்து நிற்பது. ஒரு பெண்ணிற்கு திருமணம் ஆன பின்பும் குழந்தைப்பேறு ஏற்பட்ட பின்பும் அவளது இளமை நலம் மறைந்து அவளுக்கு புதுவிதமான ஒரு தோற்றத்தை உடலானது ஏற்படுத்திவிடும். ஆனால் ஆணுக்கு மூப்பு மெல்ல மெல்ல ஏற்படும். இதனை கண்ட புலவருக்கு ஏதோ தோன்றியிருக்க வேண்டும். அதனுடைய அடிப்படையில் பிறந்ததே இந்த நற்றிணை பாடல்,

"அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்

பொன்னேர் மேனி மணியிற்றாழ்ந்த

நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்

நீத்த லோம்புமதி பூக்கே மூர"(நற்-10)

என்று பாடுகின்றார் (Balasubramanian, 2004). அதாவது தலைவியின் உடல் அழகு மறைந்து, நரை மூதாட்டி யாக அவள் ஆனபோதும தலைநாள் தலைவியைக் கண்டவன் போல் காக்க வேண்டும் அது கணவனின் கடமை என்பதைக் கூறுவது போல் இப்பாடல் அமைந்துள்ளது.

ஒரு பெண் தன் தந்தை வீட்டில் இருக்கும்பொழுது செல்வச் சிறப்போடு வாழ்கின்றாள்.அந்தப் பெண் திருமணம் செய்து கொண்டு கணவன் வீட்டுக்குச் செல்கிறாள். அவள் மணந்த கணவனின் குடும்பம் வறுமையுற்றது. வறுமையின் காரணமாக ஒரு நாளில் ஒரு பொழுது உணவு மட்டுமே அவளுக்குக் கிடைத்தது. அந்த உணவையும் பொழுதுமாறி உண்ணும் பழக்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டாள். அந்த துன்பமான நிலையிலும் தன் வீட்டில் கிடைத்த அமுதம் போன்ற உணவை அவள் ஒரு போதும் நினைத்ததில்லை.

"கொண்ட கொழுநன் குடிவற னுற்றெனக்

கொடுத்த தந்தைக் கொழுஞ்சோறு றுள்ளாள்

ஒழுகுநீர் நுணங்கறல் போலப்

பொழுதுமறுத்துண்ணும் சிறுமது கையலே"(நற்110)

என்று இந்த நற்றிணைப் பாடல் குடும்ப வறுமையை பெற்றோருக்குமறைத்து வாழக்கூடிய ஒரு மனைவியினுடைய சிறந்த பண்பாட்டை விளக்குகின்றது (Balakrishnan, 2004a). இருப்பதோ ஒரு ஆடை அதையே கிழித்து ஆணும் பெண்ணும் முடித்துக்கொள்ள வேண்டும் என்ற சூழல் வந்த பொழுதும் அன்பினால் ஒன்றி வாழ்வதே வாழ்க்கை என்று சொல்லுகிறது கலித்தொகை (Balakrishnan, 2004b).

கணவன் சிலபோது தவறு செய்தாலும் அவனை வெறுப்பது மனைவியினுடைய இயல்பன்று. அன்பினால் அவனை திருத்தவே முயல்வாள் தலைவி. சங்க இலக்கிய பாடல்களில் பரத்தையர் பிரிவு சொல்லுகின்ற பாடல்கள் எல்லாம் தலைவி தனது கணவனின் அன்பை மட்டுமே நினைக்கின்றாள். கணவன் மீது வரக்கூடிய கோபம் கூட சிறிது நேரத்தில் அவன் முகத்தை பார்க்கும் பொழுது மறைந்து விடுகின்றது என்ற மன்னித்தல் எனும் பண்பைக் குறிப்பிடுகிறது.

## குடும்ப வாழ்வில் குழந்தைச் செல்வம் பெறும்இடம்

குடும்ப வாழ்வு குழந்தை இன்றி முழுமை பெறுவதில்லை. குழந்தை இல்லாதவர் புத் என்னும் நரகத்திற்குப் போவதாக இந்து சமயத்தின் நம்பிக்கைகள் கூறுகின்றன. மக்கட் செல்வம் பற்றிக் கூறவந்த வள்ளுவர்,

"குழல் இனிது யாழ் இனிது என்ப தம் மக்கள்

மழலைச் சொல் கேளாதவர்"

என்று கூறுகின்றார். சங்க இலக்கியத்தில் புறநானூற்றில் பெரும் செல்வம் உடையவர் ஆயினும், சிறந்த உறவினர்களையும் சுற்றத்தையும் பெற்றிருந்தாலும், அறிவறிந்த மக்கட்பேறு இல்லை என்றால் வாழ்க்கை முழுமை பெறாது என்கின்றார் (Ilangumaran, 2003). சங்க இலக்கியத்தில் 'மயக்குறு மக்களை இல்லோர்க்குப் பயக்குறை இல்லைத் தாம் வாழும் நாளே' என்று பாண்டிய மன்னன் கூறுகின்றார்.எனவே மக்கள் குழந்தைச் செல்வத்தின் இனிமையை அறியலாம்.

"இம்மை உலகத்து இசையொடும் விளங்கி

மறுமைப் பயனும் மறுகின் எய்துப

சேரும் விழையும் செயிர்தீர் காட்சிச்

இரவர் பயந்த செம்மலர்" (அக.66)

என்ற இந்த அகநானூற்றுப் பாடல் இம்மை உலகத்துக்கும் மறுமை உலகத்துக்கும் குழந்தைச்செல்வம் என்பது குறைவுபடாத செல்வம் என்பதை அறிவுறுத்துகிறது. ஊடல் கொண்ட தாயையும் தந்தையையும் இணைக்கும் ஆற்றலாக குழந்தை விளங்குவதை அகநானுற்றுப்பாடல் குறிப்பிடுகிறது.

## விருந்தோம்பல்

தமிழர் தம் வாழ்வில் விருந்தோம்பல் மிக உயர்ந்த பண்பாக விளங்கியது. விருந்தோம்பல் பண்பினை நுட்பமாக நாம் கவனிக்க வேண்டும். முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து என்று வள்ளுவர் கூறுகின்றார். இத்தகைய விருந்தோம்பல் பண்பினை.

"எல்லினை வருதி எவன் குறித்தனையெனச்

சொல்லா திருப்பே னாயின் ஒல்லென

விரியுளைக் கரிமான் தேரொடு வந்த

விருந்தெதிர் கோடலின் மறப்பல் என்றும்" (மருதக்கலி-10)

எனும் பாடலால் என்றும் இல்லில் இருந்து கடன் ஆற்றும் மகளிர் விருந்தோம்பலைத் தம் கடமையாக போற்றினர் என்பதை அறிந்து கொள்ளலாம்.

சங்க நாட்களில் பெரிதும் போற்றப்பட்ட மற்றொரு அறம் விருந்தோம்பல் ஆகும். இல்லறம் எப்படி சிறந்த அறமாகக் கருதப்பட்டதோ. அதுபோல விருந்தோம்பலும் இல்லறத்தின் ஒரு பகுதியாகவே கருதப்பட்டது. அரசனாக இருந்தாலும் தன்னை அண்டி வந்தவருக்கு சிறந்த உணவுகளை படைத்து அவர்களை மகிழ்வித்தது ஆற்றுப்படை நூல்களில் நாம் காணமுடிகின்றது.

தொல்காப்பியம் பெண்ணிற்கு இலக்கணம் கூறும் பொழுது விருந்தோம்பல் பண்பாட்டையும் சேர்த்தே கூறுகின்றது. திருவள்ளுவரும் விருந்தோம்பலுக்கு தனியாக ஒரு அதிகாரம் வகுத்துள்ளார். சங்க இலக்கியங்களில் தலைவன் பொருள் தேடச் செல்கின்றதன் காரணத்தைத் தோழியிடம் சொல்லும் பொழுது பொருள் தேடி வந்து, தன் மனைவியும், சுற்றத்தாரும், சிறப்பாக வாழ்வதற்காகவும், விருந்தோம்பல் செய்வதற்காகவும் பொருள் தேடச் செல்வதாகக் கூறுகின்றான்.

விருந்தோம்பல் என்னும் வேள்வியைச் செய்யாதவர்கள் பொருளைப் பாடுபடுட்டுத் தேடி இறுதியில் பற்றற்று போவார்கள் என்கின்றார் வள்ளுவர். சங்கப்புலவர்கள் விருந்தோம்பலை

வலியுறுத்தும் இடங்கள் பலவாகும். வரக்கூடாத நேரத்தில் விருந்தினர் வரினும் முகம் கோணாது பேணும் பெண்ணை நற்றிணை பாடலால் அறியமுடிகின்றது.

“அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்

முல்லை தான்ற கற்பின் மெல்லியல்” (நற் 142)

என்று மனைவியின் இனிய பண்புகளை தலைவன் நினைத்துப் பார்ப்பதாக இந்த நற்றிணை பாடல் அமைந்துள்ளது (Balakrishnan, 2004a). விருந்தோம்பலை நம் சமூகம் போற்றியதற்கு காரணங்கள் பல உண்டு. அன்றைய காலகட்டத்தில் பெரும்பாலான மக்கள் உணவுக்காக செல்லும் ஊரையே நம்பியிருந்தனர். இத்தகைய சமுதாயத்தில் விருந்தோம்பல் ஒரு தனி மரமாக போற்றப்பட்டது வியப்பில்லை. குடும்பத்தினருக்கு நாட்டின் உறவையும் அறிவையும் வளர்த்துத் தந்ததோடு மக்களுக்கு உறவினைப் பேணியும், அன்பையும் வளர்த்து போற்றியது. புதிய அறத்தால் புதுமுகங்களைக் கண்டு முகம் மலர்ந்தும், புதிய மொழிகளைக் கேட்டும், இன்சொல் வளர்த்தும், பசித் துன்பம் போக்கியும், நாட்டு செய்திகளைப் பெற்று அறிவு பெற்று வாழும் பேறு அக்காலத்தவற்கு இருந்தது. அதனால் தான் விருந்தினைப் புதுமை என்றே கூறினர். வாழ்க்கைக்கு அடிப்படையான அன்பையும் அறிவையும் வளர்க்கும் வாயிலாக விருந்தோம்பல் விளங்கியது. இதனால்தான் இல்லறத்தைப் பிற்காலத்தவர் போற்றி நூல்கள் இயற்றினர். கலிங்கத்துப் பரணியில் செயங்கொண்டார் பாடிய பாடல் ஒன்று விருந்தோம்பலின் பண்பை சிறப்பிக்கின்றது. போர்க்களத்தில் இறந்த வீரர்களை கழுகுகளும் பருந்துகளும் குத்தி உண்ட போதும் முகம் மலர்ந்து கிடந்தனர் என கூறுகின்றார்.

“விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண

மேன்மேலும் முகம் மலரும் மேலோர் போலப்

பருந்தினமும் கழுகினமும் தாமே யுண்ணப்

பதுமமுகம் மலர்வாரைக் காண்மின் காண்மின்” (கப.களம்பாடியது)

என்று பாடியுள்ளார். சங்க காலத்தில் குடும்ப வாழ்வு சமுதாய நன்மைக்காக மனிதன் நடத்த வேண்டிய தொண்டு வாழ்வாக கருதப்பட்டது. அன்பும் உழைப்பும் வறுமையும் அன்றைய குடும்பத்தின் அடித்தளமாக விளங்கியுள்ளது.

## முடிவுரை

உலகில் உள்ள எல்லா உயிரினங்களும் உயிர் வாழ்கின்றன. ஆனால் மனிதன் மட்டும் தான் வாழ்க்கை நடத்துகிறான். இயற்கையின் இரு கூறுகள் ஆகிய ஆணும் பெண்ணும் இணைந்து உருவாக்கும் குடும்பம் சமுதாய வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைவது ஆகும். அமைதி நிலை குறைந்து பரபரப்பாக இயங்கும் இன்றைய சூழலில் குடும்பத்தை குறையின்றி நடத்த இருபாலருக்கும் வேண்டிய நல்ல இன்றைய சூழலில் குடும்பத்தை குறையின்றி நடத்த இருபாலருக்கும் வேண்டிய நல்ல சிந்தனைகளை வெளிப்படுத்தும் போது குடும்பம் என்னும் அமைப்பு ஒரு கோயிலாக பொலிவு பெறும்.

## References

Balakrishnan, V. (2004a) Nattrinai, New Century Book House (P) Ltd, Chennai, India

Balakrishnan, V. (2004b) Kalithogai, New Century Book House (P) Ltd, Chennai, India

Balasubramanian, K.V. (2004) Nattrinai, New Century Book House (P) Ltd, Chennai, India

Ilangumaran (2003) Puranaanooru, Kovilur Madalayam, Kovilur, India

Parimelazhagar (1974) Thirukkural, Saiva Siddhanta Publication Board, Tirunelveli, India

## Conflict of interest

The Author's has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author(s) 2025. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

H. Geetha, The Tamil Perspective on Family Structure, Indian Journal of Multilingual Research and Development, Vol 6, Iss 3, (2025) 1-6. DOI: https://doi.org/10.54392/ijmrd2531